# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1987, ஏப்பிரல் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1987, ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை : சதம் 60* *தபாற் செலவு : சதம் 75*

## 1987 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

(1987 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

ச. வ.—ஓ. 14/III

### உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

1. இச்சட்டமானது, 1987 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**262 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல.**

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) தேசிய அரசப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, "மாநகர சபை, நகர சபை, பட்டின சபை அத்துடன் கிராம சபை" எனும் சொற்களுக்குப் பதிலாக, "மாநகரசபை, நகர சபை அத்துடன் பிரதேச சபை" எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவானது, "மாநகர, பட்டின அல்லது கிராம இடப்பரப்பு" எனும் சொற்களுக்குப் பதிலாக, "மாநகர, பட்டின அல்லது பிரதேச சபை இடப்பரப்பு" எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

4. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்துமூன்றும் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவினை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

"(3) ஓராம் உட்பிரிவினதும் (2) ஆம் உட்பிரிவினதும் ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி, விடயத்திற்கேற்றுற்போன்று, நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 184 ஆம் பிரிவின்கீழ் அல்லது பிரதேச சபைகள் சட்டத்தின் 185 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட கட்டளைமூலம், ஏதேனும் நகரசபையின் அல்லது பிரதேச சபையின் தவிசாளர் அல்லது உறுப்பினர் பதவியிலிருந்து நியமிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் எப்போதேனும் அகற்றப்படும் ஆள் எவரும், பதவியிலிருந்து அவ்வாறு அகற்றப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படும் ஐந்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியொன்றுக்கு ஏதேனும் உள்ளூர் அதிகாரசபையின் உறுப்பினர் ஒருவராக இக்கட்டளைச்சட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்படுவதற்கு அல்லது அமர்வதற்கு அல்லது வாக்களிப்பதற்குத் தகைமையுடையவராகார்.".

ஏ 094625—2,945 (12/86)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

5. தேசிய அரசப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவானது இத்தால் நீக்கஞ்செய்யப்படுவதுடன் அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"தேர்தல்கள் நடாத்தப்படும் தேதி.

25. உள்ளூர் அதிகாரசபையொன்றின் உறுப்பினர்களுக்கான பொதுத்தேர்தல் ஒவ்வொன்றும், தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் பதவிக்காலமானது எத்தேதியன்று தொடங்கவுள்ளதோ அத்தேதிக்கு முற்போந்த நான்கு மாத காலப்பகுதிக்குள் நடாத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவைத் திருத்துதல்

6. தேசிய அரசப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

"(ஆ) அத்தகைய சுயேச்சைக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அபேட்சகர் ஒவ்வொருவர் தொடர்பிலும் (அ) என்னும் பந்தியினால் தேவைப்படுத்தப்பட்ட வைப்புப் பணம் இருநூற்றைம்பது ரூபாத் தொகையினதாகவிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவைத் திருத்துதல்

7. தேசிய அரசப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, முதன்மைச் சட்டவாக்கத்தின் 41 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (ஆ) எனும் பந்தியில், "ஒரு கிராம இடப்பரப்பாக இருக்குமிடத்து" எனும் சொற்களுக்குப் பதிலாக, "பிரதேச சபை இடப்பரப்பொன்றாக இருக்குமிடத்து," எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. தேசிய அரசப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 89 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(அ) "பிரதி மாநகர முதல்வர்" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் :—

'"பிரதி மாநகர முதல்வர்" என்பது மாநகர சபை ஒன்றின் பிரதி மாநகர முதல்வர் அல்லது நகர சபை ஒன்றின் அல்லது பிரதேச சபை ஒன்றின் துணைத்தவிசாளர் என்று பொருள்படும்;';

(ஆ) "உள்ளூர் அதிகாரசபை" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் :—

'"உள்ளூர் அதிகாரசபை" என்பது ஏதேனும் மாநகரசபை, நகரசபை அல்லது பிரதேச சபை என்று பொருள்படும்;';

(இ) "மாநகர முதல்வர்" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் :—

'"மாநகர முதல்வர்" என்பது மாநகர சபை ஒன்றின் முதல்வர் அல்லது நகரசபை ஒன்றின் அல்லது பிரதேச சபை ஒன்றின் தவிசாளர் என்று பொருள்படும்;';

(ஈ) "அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பாராளுமன்ற இடாப்பு" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம் :—

'"பிரதேச சபை இடப்பரப்பு" என்பது பிரதேச சபைகள் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட ஏதேனும் பிரதேச சபை இடப்பரப்பு என்று பொருள்படும்;';

(உ) "பட்டினம்" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் :—

'"பட்டினம்" என்பது, நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் கருத்திற்குட்பட்ட ஏதேனும் பட்டினம் என்று பொருள்படும்;'; அத்துடன்

(ஊ) "கிராம இடப்பரப்பு" என்பதன் வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன்மூலம்.

9. தேசிய அரசப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையானது, "நியமனப் பத்திரப் படிவம்" என்று தொடக்கம் "பெயர்குறித்து நியமிக்கின்றது" என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.*

"நியமனப் பத்திரப் படிவம்

(பிரிவு 28 (2))

................................சபை/பிரதேச சபை.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான/அபேட்சகர்களின் சுயேச்சைக் குழுவொன்றான ................................................ கட்சியானது, பின்வரும் ஆட்களை, அவர்களது பெயர்கள் எம்முதன்மை வரிசை ஒழுங்கின்படி காணப்படுகின்றனவோ அம்முதன்மை வரிசை ஒழுங்கில், .......................... மாநகர சபையின்/நகரசபையின்/பிரதேச சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்படவுள்ள பொதுத் தேர்தலில் தேர்தலுக்கான அபேட்சகர்களாகவும், முதலாவதாகவும் இரண்டாவதாகவும் பெயர்குறிப்பிடப்பட்ட அபேட்சகர்களை, மேலதிகமாக, முறையே மாநகர முதல்வராகவும் பிரதி மாநகர முதல்வராகவும்/அச்சபையின் முறையே தவிசாளராகவும் துணைத் தவிசாளராகவும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான அபேட்சகர்களாகவும் இத்தால் பெயர்குறித்து நியமிக்கின்றது.".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான நான்காம் அட்டவணையை மாற்றீடு செய்தல்.

10. தேசிய அரசப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்துக்கான நான்காம் அட்டவணையானது இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணையானது இடப்படுகின்றது :—

(பிரிவு 76 (1))

" நான்காம் அட்டவணை

இரகசியம் பேணும் வெளிப்படுத்துகைக்கான படிவம்

........................... ஆகிய நான், ........................ மாநகரசபையின்/ நகர சபையின், பிரதேச சபையின் தேர்தல் இடப்பரப்புக்கான இத்தேர்தலில் எனக்கு வாசித்துக்காட்டப்பட்டதான உள்ளூரதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 76 ஆம் பிரிவினால் தடைசெய்யப்பட்ட எதனையும் செய்ய மாட்டேன் என விசுவாசமாகச் சத்தியம் செய்து வெளிப்படுத்துகிறேன்.

————,
வெளிப்படுத்துபவரின் கையொப்பம்."

————

வெளிப்படுத்துகையை ஏற்கும் ஆளின் கையொப்பம்.

குறிப்பு.—இப்பிரிவானது வெளிப்படுத்துகையை ஏற்கும் ஆளினால் வெளிப்படுத்துபவருக்கு வாசித்துக் காட்டப்படுதல் வேண்டும்.